**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**
O.S.No.49/2024

பி.வா.சா.1– தனலட்சுமி க/பெ திருப்பதி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 21.01.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**பி.வா.சா.1– தனலட்சுமி க/பெ திருப்பதி**
**1, 2, வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

1. என்னுடன் உடன் பிறந்த சகோதரர்கள் எத்தனை பேர் என்றால் 4 அண்ணன்கள் 1 தம்பி ஆவார்கள். எனது தந்தை இறந்த வருடம் எனக்கு சரியாக ஞாபகமில்லை. எனக்கு திருமணமாகி 18 வருடங்கள் ஆகிறது. எனது திருமணத்திற்கு பிறகு எனது கணவர் வீட்டில் பாலசமுத்திரத்தில் வாழ்ந்து வந்தேன். தற்போது அம்மா வீட்டில் 5 வருடமாக இருந்து வருகிறேன். தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது.

2. எனது தந்தை ராமசாமிக்கு பாத்தியப்பட்ட சொத்தின் மொத்த அளவு தெரியுமா என்றால் தெரியாது. 2015 ம் ஆண்டு எனது சகோதரர் குமார் 12 1/2 செண்ட் மாரியாயி என்பவருக்கு கிரையம் எழுதிக்கொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி பத்திரத்தில் குமாருக்கு உரிய பாகத்தைத்தான் விற்பனை செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதை பற்றி என்னிடம் சொல்லவில்லை. எனக்கு படிக்கத் தெரியாது. குடும்ப செலவுக்காக விற்காமல் குமாருக்கு மட்டும் பாத்தியப்பட்ட பாகத்தைத்தான் விற்பனை செய்துள்ளார் என்றால் பாகம் பிரிக்கவில்லை.

3. குமார் விற்பனை செய்த இடம் தனி உட்பிரிவாகி மாரியாயி என்பவரின் அனுபவத்தில் தற்போது உள்ளது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சர்வே எண். 353/3 ஏ எனக்குரிய பாக நிலத்தில் தான் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். எனது தாயாரும், அவருக்குரிய பாக நிலத்தில் குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல எல்லோரும் ஒரே வீட்டில் கூட்டுக்குடும்பமாக இருக்கிறோம். கூட்டுக்குடும்பமாக இருப்பதாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் எனது சகோதரர்கள் வெளியூரில் இருக்கிறார்கள் என்றாலும் சரியல்ல கூட்டுக்குடும்பமாகத்தான் உள்ளோம்.

4. கடந்த 28.05.2024 ம் தேதி வாதி வைத்துள்ள கறி வருவல் கடையை உடைத்து சேதப்படுத்தியதாக எங்கள் மீது வாதி லாலாப்பேட்டை காவல்

நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் இல்லை. தற்போது வரை அங்கு கடை உள்ளது என்றால் சரியல்ல. 10.12.2024ம் தேதி வாதி இடத்தை ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்ததாக லாலாப்பேட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்து நான் விசாரணையில் கலந்து கொண்டேனா என்றால் இல்லை. நாங்கள் விசாரணைக்குச் சென்று எங்களை விசாரணை செய்து மனு ரசீது கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

5. நாங்கள் கூட்டுக்குடும்பமாக இல்லை யென்றாலும், பாகப்பிரிவினை செய்து கொண்டு வாதியை தொந்தரவு செய்து வருகிறோம் என்றால் எனது தம்பியை தவிர அனைவரும் கூட்டுக்குடும்பமாகத்தான் இருந்து வருகிறோம் பாகப்பிரிவினை நடக்கவில்லை. 01.09.2021ம் தேதி எனது தம்பி காசிராஜன் என்பவருக்கு கிரையம் கொடுத்த விவரம் தெரியுமா என்றால் எனக்குத் தெரியாமல் செய்து கொண்டார்கள்.

7. காசிராஜன் வாங்கிய நாள் முதல் அவர் அனுபவத்தில் இருந்து வந்து வாதிகள் கிரையம் பெற்று தற்போது வரை வாதிகளின் அனுபவத்தில் தாவா சொத்து உள்ளது என்றால் எங்கள் அனுபவத்தில் உள்ளது. நாங்கள் தொந்தரவு செய்து வருவதால் தான் வாதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்து எந்த நடவடிக்கையும் எடுக்கததால் தான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் வழக்கில் கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.01.22 18:09:40 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.